**ஐக்கிய அமெரிக்கத் தூதரகம்**
கொழும்பு
**ஊடக அறிக்கை**
பொது அலுவல்கள் பிரிவு
தொலை பேசி: +94 (11) 249-8100 ● தொலை நகல்: +94 (11) 244-9070
மின்னஞ்சல்: AngelicaB@state.gov ● இணையத்தளம்: http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20220625

**இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் அமெரிக்க அரசாங்கத்தின் உயர்மட்ட தூதுக்குழு**

அமெரிக்க திறைசேரித் திணைக்களம் மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்மட்ட தூதுக் குழுவொன்று ஜூன் 26 – 29 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. இத்தூதுக்குழுவில் ஆசியாவிற்கான பிரதி உதவித் திறைசேரிச் செயலாளர் றொபர்ட் கப்ரொத் மற்றும் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான பிரதி உதவி இராஜாங்கச் செயலாளரான தூதுவர் கெல்லி கெய்டர்லிங் ஆகியோர் உள்ளடங்குகின்றனர். அவர்கள் பல்வேறு அரசியல் பிரதிநிதிகள், பொருளாதார நிபுணர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளைச் சந்திப்பார்கள். தேவைகளுடைய இலங்கையர்கள், தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் இலங்கையர்கள், மற்றும் நிலைபேறான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு எதிர்கால பொருளாதாரத்திற்கான திட்டங்களை வகுக்கும் இலங்கையர்கள் ஆகியோரிற்கு அமெரிக்கா உதவிசெய்வதற்கான மிகவும் செயற்திறன்வாய்ந்த வழிகள் தொடர்பில் தமது அனைத்து சந்திப்புகளிலும் அவர்கள் ஆராய்வார்கள்.

“இலங்கை மக்களின் பாதுகாப்பு மற்றும் செழிப்புக்கான எமது தொடர்ச்சியான உறுதிப்பாட்டினை இவ்விஜயம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது” என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் தெரிவித்தார். “இலங்கையர்கள் தமது வரலாற்றில் மிகப்பெரும் பொருளாதார சவால்களை எதிர்கொள்கையில், பொருளாதார வளர்ச்சிக்கு உதவிசெய்வதற்காகவும் மற்றும் ஜனநாயக நிறுவனங்களை பலப்படுத்துவதற்காகவும் நாங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் முன்னெப்போதையும்விட தற்போது மிகவும் முக்கியமானதாக இருக்கின்றன.” என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வாரங்களில், இலங்கையின் சிறு மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான புதிய நிதியளிப்பாக 120 மில்லியன் டொலர்கள், இலங்கையின் பாலுற்பத்திக் கைத்தொழிற்துறைக்கான ஒரு பங்களிப்பாக 27 மில்லியன் டொலர்கள், பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான மனிதாபிமான உதவியாக 5.75 மில்லியன் டொலர்கள், ஆகியவற்றை அமெரிக்கா அறிவித்துள்ளது. இலகுவில் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் மற்றும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு உதவக்கூடிய நிதி

சீர்திருத்தத்திற்கான தொழில்நுட்ப உதவிகள் ஆகியவற்றை வழங்குவதற்காக 6 மில்லியன் டொலர்களை புதிய மானியங்களாக வழங்குவதற்கும் அமெரிக்கா உறுதியளித்துள்ளது. இலங்கையர்கள் தமது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காகவும், உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்த்துப் போராடுவதற்காகவும், பொதுச் சுகாதாரம் மற்றும் கல்வியை மேம்படுத்துவதற்காகவும் முயற்சிசெய்துகொண்டிருக்கும் வேளையில் எதிர்வரும் மாதங்களில் அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கையர்களுக்கு உதவிசெய்யும். தற்போதைய நெருக்கடிக்கு மிகவும் நீடித்த நிலையான தீர்வை வழங்கக்கூடிய சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து உதவி பெறுவதற்கான இலங்கையின் முடிவை அமெரிக்கா பலமாக ஆதரிக்கிறது.